

தமிழ்நாடு அரசு

நான்காம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்
ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

4th_STD_Tamil_Term 2.indd 1 6/12/2025 2:35:09 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2019

திருத்திய பதிப்பு – 2020, 2025

மறுபதிப்பு – 2021, 2022, 2023, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019
நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

4th_STD_Tamil_Term 2.indd 2 6/12/2025 2:35:09 PM



இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமதர்மச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமைமாண்பினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையவராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

4th_STD_Tamil_Term 2.indd 3 6/12/2025 2:35:10 PM

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

4th_STD_Tamil_Term 2.indd 4 6/12/2025 2:35:11 PM

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




4th_STD_Tamil_Term 2.indd 5 6/12/2025 2:35:12 PM

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பாதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

4th_STD_Tamil_Term 2.indd 6 6/12/2025 2:35:12 PM



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

4th_STD_Tamil_Term 2.indd 7 6/12/2025 2:35:12 PM

முன்னுரை

குழந்தைகள் சிறு பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும், குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் **வாங்க பகிரலாம்.**





குழந்தை, வகுப்பறைச் சூழலைத் தாண்டி சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் **சிந்திக்கலாமா?**

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் **மொழியோடு விளையாடு.**



4th_STD_Tamil_Term 2.indd 8 6/12/2025 2:35:14 PM



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**



திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**



மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோம்.**

புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள். பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும் இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும் ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.

வாழ்த்து..!


ஆக்கியோர்.

4th_STD_Tamil_Term 2.indd 9 6/12/2025 2:35:15 PM

தமிழ்

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம்	மாதம்
1.	காவல்காரர்	1	அக்டோபர்
2.	யானையும் பானையும்	5	அக்டோபர்
3.	பனிமலைப் பயணம்	9	அக்டோபர்
4.	உள்ளங்கையில் ஓர் உலகம்	16	நவம்பர்
5.	எழில் கொஞ்சும் அருவி	18	நவம்பர்
6.	அன்பின் வழி	22	டிசம்பர்
7.	நன்னெறி	27	டிசம்பர்
	அகர முதலி	29	



4IMY9

மின் நூல்

13NB7

மதிப்பீடு

4th_STD_Tamil_Term 2.indd 10 6/12/2025 2:35:21 PM

1 காவல்காரர்

சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்

காக்கை குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு

காற்று பலமாய் அடித்த தாலே
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ

இதனைக் கண்ட காகம் ஒன்று
இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே என்று கருதி

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு வெள்ளைச் சட்டை
கட்டிக் கொள்ள சரிகை வேட்டி



4th_STD_Tamil_Term 2.indd 1 6/12/2025 2:35:22 PM



எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே
உடுத்திக் கொள்வீர் என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போட வில்லை
ஆவ லோடு புதிய உடையை
அணிய வில்லை அசைய வில்லை

உடனே காகம் அருகில் சென்றே
உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்
அடடே இந்தக் காவல் காரர்
யாரோ என்று நினைத்தி ருந்தேன்

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக் கணத்தே நண்பர் அறிய
எடுத்துச் சொல்வேன் என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
காலை வைத்து நின்று கொண்டு
கூவி அழைத்துப் பறவை யாவும்
கூடச் செய்து விட்ட தங்கே

– அழ. வள்ளியப்பா

ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.

சொல்லும் பொருளும்

நேர்த்தியான – சீரான
நித்தம் – நாள்தோறும்
உலவுதல் – நடமாடுதல்
ஆவல் – விருப்பம்
கணம் – மிகக் குறைந்த காலம்

4th_STD_Tamil_Term 2.indd 2 6/12/2025 2:35:23 PM



வாங்க பகிரலாம்

- கதைப்பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலின் பொருளைப் புரிந்துகொண்டு சொந்தநடையில் கூறுக.

சூழல் 1

ஒருவர் தன்னிடமுள்ள தின்பண்டத்தைப் பிறருடன் பகிர்ந்து உண்பார்.

சூழல் 2

மற்றொருவர் தனக்குக் கிடைத்த தின்பண்டத்தைப் பிறருக்குக் கொடுக்காமல் தானே உண்பார்.



இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பெயரில்லாத இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) பெயர் + இலாத ஆ) பெயர் + இல்லாத

இ) பெயரில் + இல்லாத ஈ) பெயரே + இல்லாத

2. வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் _____

அ) கீழே ஆ) அருகில் இ) தொலைவில் ஈ) வளைவில்

3. அசைய + இல்லை – இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) அசைய இல்லை ஆ) அசைவில்லை

இ) அசையவில்லை ஈ) அசையில்லை

4. நித்தம் – இச்சொல்லுக்குரிய பொருள் _____

அ) நாளும் ஆ) இப்பொழுதும் இ) நேற்றும் ஈ) எப்பொழுதும்

வினாக்களுக்கு விடையளிக்க.

1. தோட்டத்தின் நடுவே காவல்காரர் எப்படி நின்றிருந்தார்?
2. இப்பாடலில் வரும் காவல்காரர் எவ்வாறு காவல் காத்தார்?
3. பொம்மைக்குக் காகம் என்னென்ன கொடுத்தது?
4. காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?

4th_STD_Tamil_Term 2.indd 3 6/12/2025 2:35:24 PM

பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.

சட்டை	சரிகை	_____	_____
_____	_____	_____	_____

விடுபட்ட சொற்களை நிரப்பிப் பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?





திருவிழா

எங்கள் ஊர்த் திருவிழா
மகிழ்ச்சி தரும் பெருவிழா
கண்ணைக் கவரும் கண்ணாடி
காற்றில் பறக்கும் காற்றாடி
_____
_____
வந்து பார்த்து மகிழுங்கள்
முந்தி வாங்கிச் செல்லுங்கள்





உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

நமக்குப் பயன்தரும் தாவரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கிறோம். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.

வினாக்கள்



1. வாழையின் எந்தெந்தப் பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?
2. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?
3. வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.
4. வாழையிலை – இச்சொல்லைப் பிரித்து எழுதுக.
5. பலவகை – இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.

செயல்திட்டம்



காகம் குறித்த வேறு பாடல்களைத் திரட்டுக.

4th_STD_Tamil_Term 2.indd 4 6/12/2025 2:35:26 PM

2 யானையும் பானையும்

உழவர் ஒருவரின் மகனுக்குத் திருமணம். அவர், திருமண விழாவில் யானை ஊர்வலம் நடத்த விரும்பினார். வணிகர் ஒருவரிடம் சென்று யானையை இரவலாக வாங்கினார். திருமண ஊர்வலம் முடிந்ததும் யானை தற்செயலாக இறந்துவிட்டது. வணிகரிடம் உழவர், "ஐயா! மன்னித்து விடுங்கள். உங்கள் யானை இறந்துவிட்டது. ஈடு செய்ய முடியாத இழப்பு என்று புரிகிறது. யானைக்குப் பதிலாகப் பணமோ, பொருளோ தந்துவிடுகிறேன். தயவுசெய்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.



உழவர் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் வணிகர் ஏற்றுக்கொள்ளவில்லை. "எனக்குப் பணமோ பொருளோ வேண்டாம். என் யானைதான் வேண்டும்" என்று அடம்பிடித்தார்.


யானையை இழந்த துக்கத்தில் வணிகர் பேசுவது உழவருக்குப் புரிந்தது. ஆனாலும் அதை அவருக்கு உணர்த்த முடியவில்லையே என்று உழவர் வருந்தினார். இருவரும் மரியாதை இராமன் என்பவரின் உதவியை நாடினர்.

மரியாதை இராமன் வணிகரின் வேதனையை அறிந்தார்; உழவரின் பரிதாப நிலையும் புரிந்தது. எனவே இந்நிலையை வணிகருக்குப் பக்குவமாகப் புரியவைக்க விரும்பினார். மரியாதை இராமன் உழவரிடம் "நாளை உங்கள் வீட்டிற்கு வணிகரை வரவழையுங்கள். நான் சொல்வது போலச் செய்யுங்கள்" என்று கூறினார்.

4th_STD_Tamil_Term 2.indd 5 6/12/2025 2:35:26 PM



உழவரும் அவ்வாறே செய்தார். மறுநாள் வணிகரும் உழவர் வீட்டிற்குச் சென்றார்; கதவைத் தட்டினார். யாரும் திறக்க வரவில்லை. பிறகு கதவைச் சற்று வேகமாகத் தள்ளி, திறக்க முயன்றார். அப்போது கதவின் பின்புறம் அடுக்கி வைத்திருந்த பானைகள் கீழே விழுந்து உடைந்தன. "ஐயையோ! பானைகள் உடைந்துவிட்டனவே" என்று கதறினார் வணிகர். சத்தம் கேட்டு உள்ளே இருந்து வந்த உழவர் "வணிகரே, என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? எங்கள் வீட்டில் காலங்காலமாகப் போற்றி வைத்திருந்த பழம்பானைகள் இவை. இந்தப் பானைகளை இப்படி உடைத்து விட்டீர்களே. இதே பானைகளை உடையாமல் திருப்பித் தாருங்கள்" என்று கோபமாகக் கேட்டார்.



இருவரும் மரியாதை இராமனிடம் சென்றனர். உழவரின் வீட்டில் நடந்ததைக் கூறினர். அதனைக் கேட்டு மரியாதை இராமன் "ஐயா வணிகரே, உடைந்து போன அதே பானைகளைக் கேட்கிறார் உழவர். அவற்றை உங்களால் கொடுக்க முடியாது இல்லையா? அதே போலதான் இறந்துபோன யானையையும் உழவரால் திரும்பக் கொடுக்க முடியாது. தயவுசெய்து உழவரின் நிலையைப் புரிந்து கொள்ளுங்கள். இறந்துபோனவை திரும்ப வராது என்பதையும் உணருங்கள்" என்று கூறினார். வணிகருக்கு உழவரின் நிலை புரிந்தது. உழவரும் யானைக்கு ஈடான தொகையை வணிகருக்குக் கொடுத்தார். வணிகரும் அதனை ஏற்றுக் கொண்டார்.



வாங்க பகிரலாம்

யானையும் பானையும் என்ற கதையை உன் சொந்த நடையில் கூறுக.

நீ உன் நண்பரிடம் வாங்கிய பொருள் உடைந்துவிட்டால் / தொலைந்துவிட்டால் அதை அவருக்கு எவ்வாறு புரியவைப்பாய்?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 2.indd 6 6/12/2025 2:35:27 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

வினாக்களுக்கு விடையளிக்க.

1. உழவர் யானையை எதற்காக இரவல் வாங்கினார்?

2. ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?

3. மரியாதை இராமன் உழவரிடம் என்ன கூறியிருப்பார்?

சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரமைத்து எழுதுக.

வீட்டிற்குச் வணிகரும் உழவர் சென்றார்	தயவுசெய்து புரிந்து உழவரின் நிலையைப் கொள்ளுங்கள்	மரியாதை இருவரும் சென்றனர் இராமனிடம்	வேதனை மரியாதை வணிகரின் புரிந்தது இராமனுக்கு

1. _____

2. _____

3. _____

4. _____

செயல்திட்டம்



குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை எழுதி, சொந்த நடையில் பகிர்க.

நான்கு எருதுகள் – ஒற்றுமையாக வாழ்தல் – சிங்கம் வேட்டையாட நினைத்தல் – எருதுகள் எதிர்த்தல் – சிங்கத்தின் சூழ்ச்சி – எருதுகள் பிரிதல் – சிங்கம் வேட்டையாட முயற்சி செய்தல் – எருதுகள் ஒற்றுமையாதல் – எதிர்த்தல்

4th_STD_Tamil_Term 2.indd 7 6/12/2025 2:35:28 PM

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



உழவர்	இறந்துவிட்டது	உடைந்துவிட்டனவே
மறுநாள்	வரவழையுங்கள்	ஈடான தொகை
அவ்வாறே	செய்துவிட்டீர்கள்	புரிந்துகொள்ளுங்கள்
முயன்றார்	தந்துவிடுகிறேன்	பெற்றுக் கொள்ளுங்கள்
வணிகருக்கு	ஈடு செய்ய முடியாத	ஏற்றுக்கொள்ளவில்லை

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1. ஐயா மன்னித்து விடுங்கள்

.....

2. யானைக்குப் பதிலாகப் பணமோ பொருளோ தந்துவிடுகிறேன்

.....

3. ஐயையோ பானைகள் உடைந்துவிட்டனவே

.....

4. என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்


.....

5. இருவரும் மரியாதை இராமனிடம் சென்றனர்

.....

4th_STD_Tamil_Term 2.indd 8 6/12/2025 2:35:28 PM

3 பனிமலைப் பயணம்


















4th_STD_Tamil_Term 2.indd 9 6/12/2025 2:35:29 PM

















4th_STD_Tamil_Term 2.indd 10 6/12/2025 2:35:29 PM















வாங்க பகிரலாம்

நண்பர்களுடன் இணைந்து கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

நமது பயணங்கள் பாதுகாப்பாக அமைய என்னென்ன செய்யலாம்?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 2.indd 11 6/12/2025 2:35:30 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பனிமலைக்காட்டிற்கு விரைவாகச் சென்றுவிட முடியாது. அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல்? _____

அ) மெதுவாக ஆ) எளிதாக

இ) கடினமாக ஈ) வேகமாக

2. என்ன + என்று – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) என்னஎன்று ஆ) என்னென்று

இ) என்னவென்று ஈ) என்னவ்வென்று

3. அக்காட்டில் – இதனைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) அந்த + காட்டில் ஆ அ + காட்டில்

இ) அக் + காட்டில் ஈ) அந்தக் + காட்டில்

4. என்னவாயிற்று – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) என்ன + ஆயிற்று ஆ) என்னவா + ஆயிற்று

இ) என்ன + வாயிற்று ஈ) என்னவோ + ஆயிற்று

வினாக்களுக்கு விடையளிக்க.

1. படகில் செல்லும்போது, விலங்குகள் ஏன் திடீரென அலறின?

2. நரி, முதலையிடம் என்ன கூறியது?

3. இக்கதையில் உனக்குப் பிடித்த விலங்கு எது? ஏன்?

சொல்லக் கேட்டு எழுதுக.

1. அடர்ந்த காடு
2. பயணம்
3. திருவிழா
4. விலங்குகள்
5. பனிமலைக்காடு

4th_STD_Tamil_Term 2.indd 12 6/12/2025 2:35:31 PM



மொழியோடு விளையாடு

அகர வரிசைப்படுத்தி எழுதுக.

மைனா, முறுக்கு, மோப்பம், மகிழ்ச்சி, மௌவல், மாதம்,
மொழி, மீன், மேகம், மெத்தை, மிளகு, மூட்டை



கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் உருவாக்குக.

எ.கா.
1. நண்பன் – மகிழன் எனக்கு நல்ல நண்பன்.

2. மான் –

3. பயணம் –

4. காடு –

5. படகு –

4th_STD_Tamil_Term 2.indd 13 6/12/2025 2:35:32 PM

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



பாராட்டின	அருகிலிருந்த	திருவிழாவிற்கு
சாய்கிறதே	சிறுத்தைகள்	ஒற்றுமையுடன்
செரிமானம்	பார்த்தீர்களா	என்னவாயிற்று
கடிக்கிறேன்	தந்திரத்தால்	மகிழ்ச்சியடைகிறோம்
சாப்பிடுங்கள்	காப்பாற்றினீர்	மூலிகைச் செடிகள்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1 ஐயோ படகு சாய்கிறதே ஆ என்னவாயிற்று

.....

2 நன்றி நண்பர்களே

.....

3 அப்புறம் என்னவாயிற்று

.....

4 ஐயோ ஆளை விடுங்க நான் போய் விடுகிறேன்

.....

5 அனைத்து விலங்குகளும் நரியைப் பாராட்டின

.....

4th_STD_Tamil_Term 2.indd 14 6/12/2025 2:35:32 PM

கலையும் கைவண்ணமும்

காகிதத்தில் வண்ணப்பூக்கள் செய்வோம்

தேவையான பொருள்கள்

வண்ணத் தாள்கள், வரைமெழுகு, பசை

செய்யும் முறை

1



2



3



4



5



6



7



8



செயல்திட்டம்



உனக்குப் பிடித்த பறவை/விலங்குகளின் படங்களை வரைந்தோ/ஒட்டியோ உரையாடலை எழுதுக.

4th_STD_Tamil_Term 2.indd 15 6/12/2025 2:35:33 PM

4 உள்ளங்கையில் ஓர் உலகம்

உலகைச் சுற்றிக் காட்டிடுவேன்
உனக்கு மகிழ்ச்சியைத் தந்திடுவேன்
என்ன வேண்டும் என்றாலும்
எண்ணும் முன்னே சொல்லிடுவேன்

இணைய வழியில் அனைவரையும்
இணைந்தே இருக்கச் செய்திடுவேன்
கடிதம் அனுப்ப வேண்டுமென்றால்
விரைந்தே அனுப்பத் துணைபுரிவேன்

தகவல் களஞ்சியம் நான்தானே
தரணி போற்றி மகிழ்ந்திடுமே
உலகைச் சுருக்கி உன்கையில்
உலவிடும் கணினி நான்தானே

என்றும் ஓய்வு எனக்கில்லை
எதிலும் சோர்வு என்றில்லை
எந்தப் பொருளின் செய்தியையும்
எடுத்துத் தருவேன் ஒருநொடியில்

உள்ளங்கையில் ஓர் உலகம்
உள்ளதைக் காட்டும் கண்ணாடி
என்றே என்னை எல்லாரும்
ஏற்றம் கொண்டே அழைத்திடுவார்



சொல்லும் பொருளும்

தரணி – உலகம்
ஏற்றம் – உயர்வு
தகவல் களஞ்சியம் – தகவல்களைச் சேகரிக்கும் இடம்



வாங்க பகிரலாம்

கணினியின் சிறப்புகளைப் பற்றிப் பேசுக.

அழகன், புத்தகத்தில் மட்டுமே படிக்கமுடியும் என்கிறான்.
அவன் நண்பனோ கணினியிலும் படிக்கலாம் என்கிறான்.
இதுபற்றி உங்கள் கருத்து என்ன?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 2.indd 16 6/12/2025 2:35:34 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. தரணி என்ற சொல்லின் பொருள் _____

அ) உருண்டை ஆ) உருளை

இ) உலகம் ஈ) ஊலகம்

2. இணைந்தே – இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

அ) குவிந்தே ஆ) சோர்ந்து

இ) பிரிந்தே ஈ) சேர்ந்தே

3. எனக்கில்லை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) எனக் + கில்லை ஆ) என + க்கில்லை

இ) என + கில்லை ஈ) எனக்கு + இல்லை

4. வேண்டுமென்றால் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) வேண்டும் + மென்றால் ஆ) வேண்டு + என்றால்

இ) வேண்டும் + என்றால் ஈ) வேண்டு + மென்றால்

5. உலகை + சுருக்கி – இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) உலகைசுருக்கி ஆ) உலகைச்சுருக்கி

இ) உலகுச்சுருக்கி ஈ) உலகுசுருக்கி

வினாக்களுக்கு விடையளிக்க.

1. கணினியின் பயன்கள் யாவை?

2. 'தகவல் களஞ்சியம் நான்தானே' என்று இப்பாடல் எதைக் கூறுகிறது?

செயல்திட்டம்



நாளிதழ், வார இதழ்களில் வெளியாகும் கணினி பற்றிய செய்திகளைப் படங்களுடன் உன் குறிப்பேட்டில் ஒட்டி மகிழ்க.

4th_STD_Tamil_Term 2.indd 17 6/12/2025 2:35:35 PM

5 எழில் கொஞ்சும் அருவி

(அங்கவை, சங்கவை இருவரும் சித்தப்பா, சித்தி வீட்டிற்குச் செல்கிறார்கள்.)



சித்தி : வாருங்கள், செல்லங்களே! வீட்டில் எல்லாரும் நலமா?

இருவரும் : நலமாய் உள்ளோம் சித்தி, நீங்கள் நலமா?

சித்தப்பா : நீங்கள் இருவரும் கல்விச் சுற்றுலா சென்று வந்தீர்களாமே! அதைப் பற்றிக் கூறுங்கள் கேட்போம்.

அங்கவை : நாங்கள் ஒகேனக்கல் அருவிக்குப் போய்வந்தோம். அது தருமபுரி மாவட்டத்தில் உள்ளது.

சங்கவை : எழில் கொஞ்சும் மலையில் உள்ள அந்த இடம், கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் உள்ளது.

சித்தப்பா : ஆம் அது பெரிய அருவிதான்.

அங்கவை : மலையின் உச்சியிலிருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போல பேரிரைச்சலுடன் நீர்வீழ்ச்சி கொட்டுகிறது. அதைப் பார்க்கப் பார்க்க அழகோ அழகு!

சித்தப்பா : அதற்கு ஒகேனக்கல் என்ற பெயர் எப்படி வந்ததாம்? தெரிந்து கொண்டீர்களா?

அங்கவை : கன்னடத்தில் 'ஒகே' என்பது புகை என்பதைக் குறிக்குமாம். கொட்டும் நீர் கல்பாறையில் பட்டுத் தெறித்து, வெண்புகை போலத் தோற்றம் அளிப்பதால்தான் இப்பெயர் வந்ததாம்.

4th_STD_Tamil_Term 2.indd 18 6/12/2025 2:35:35 PM







சங்கவை : ஆம். அங்கு வருபவர்களை ஆரவாரத்தோடு வரவேற்பது போல அருவியில் தண்ணீர் கொட்டும். அக்காட்சி அற்புதமாக இருக்கும்.

சித்தி : அவ்விடத்திற்கு எப்படிச் சென்றீர்கள்?

சங்கவை : பரிசலில் சென்றோம். அப்பயணம் சிறு அச்சத்தைத் தந்தாலும் பெரிய மகிழ்ச்சியையும் தந்தது. அந்த அருமையான பரிசல் பயணம் என்னே அருமை!

சித்தப்பா : அப்படியா? மகிழ்ச்சி!

அங்கவை : மலை நடுவே அருவிநீர் ஓடும் காட்சி வெண்ணெய் உருகி ஓடுவதுபோல தெரிந்தது.

சித்தி : வேறு என்னென்ன பார்த்தீர்கள்?

சங்கவை : அடுத்ததாக இரு மலைகளுக்கு இடையே அமைக்கப்பட்ட தொங்குபாலத்தில் நடந்து சென்றோம்.

அங்கவை : 100 அடி உயரத்திலிருந்து விழும் அருவியில் நனைந்தது மகிழ்ச்சியாக இருந்தது. உணவு உண்டபின், மான் பூங்காவிற்கும் முதலைப் பண்ணைக்கும் சென்று பார்த்தோம்.

சங்கவை : சித்தி, அங்கே மிகப் பழைமையான தேசநாதீஸ்வரர் கோவில் உள்ளது. அது அதியமான் காலத்தைச் சேர்ந்தது என்பதைக் கல்வெட்டைப் படித்து, அறிந்து கொண்டோம்.

சித்தப்பா : பாராட்டுகள், குழந்தைகளே! அருவியின் அழகைக் கண்டுகளித்தது மட்டுமின்றி, அங்குள்ள பொதுஅறிவுச் செய்திகளையும் திரட்டியிருக்கிறீர்கள்.

சித்தி : எங்களுக்கும் ஒகேனக்கலை நேரில் சென்று பார்த்த அனுபவத்தை உண்டாக்கிவிட்டீர்கள்! நன்றி குழந்தைகளே! நம் குடும்பத்தினருடன் ஒருமுறை சென்று வருவோம்.



வாங்க பகிரலாம்

அருவி, ஏரி, நதி, ஆறு, பூங்கா போன்ற இடங்களுக்குச் சென்று வந்த அனுபவம்.

சுற்றுலாத் தலங்களில் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை எவை?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 2.indd 19 6/12/2025 2:35:36 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ஒகேனக்கல் அருவியில் நீர் வீழ்வது _____ உருக்கி ஊற்றுவது போல் இருந்தது.

அ) தங்கத்தை ஆ) வெள்ளியை

இ) இரும்பை ஈ) கற்பாறையை

2. ஒகே என்ற சொல்லின் பொருள் _____.

அ) பாறை ஆ) பாலம்

இ) நீர் ஈ) புகை

3. வெண்புகை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) வெண் + புகை ஆ) வெ + புகை

இ) வெண்மை + புகை ஈ) வெம்மை + புகை

4. பெரிய + இரைச்சல் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____.

அ) பேரிரைச்சல் ஆ) பெரியஇரைச்சல்

இ) பெரியரைச்சல் ஈ) பெரிரைச்சல்

5. தோற்றம் – இச்சொல்லின் எதிர்ச்சொல் _____.

அ) தொடக்கம் ஆ) மறைவு

இ) முதல் ஈ) ஆரம்பம்

வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஒகேனக்கல் அருவி எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?

3. ஒகேனக்கல் பகுதியில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களின் பெயர்களை எழுதுக.

4th_STD_Tamil_Term 2.indd 20 6/12/2025 2:35:36 PM

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



வெண்புகை	மட்டத்திலிருந்து	உயரத்திலிருந்து
ஒகேனக்கல்	பேரிரைச்சலுடன்	தொங்குபாலத்தில்
வந்தீர்களாமே	கல்விச் சுற்றுலா	திரட்டியிருக்கிறீர்கள்
செல்லங்களே	ஆரவாரத்தோடு	அறிந்து கொண்டோம்
உச்சியிலிருந்து	பழைமையான	உண்டாக்கிவிட்டீர்கள்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1. வாருங்கள் செல்லங்களே வீட்டில் எல்லாரும் நலமா

.....

2. ஒகேனக்கல் என்ற பெயர் எப்படி வந்தது

.....

3. பரிசல் பயணம் என்னே அருமை

.....

4. எதன் மூலம் பயணம் செய்தீர்கள்

.....

5. அருவியில் தண்ணீர் கொட்டும்

.....

4th_STD_Tamil_Term 2.indd 21 6/12/2025 2:35:37 PM

6 அன்பின் வழி



மன்னர் ஒருவர் தம் குதிரையில் ஏறி அமர்ந்தபடி, ஒரு கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். கிராமங்களின் முன்னேற்றத்தையும் மக்களின் குறைகளையும் கேட்டறிய மன்னர் தமது குதிரையில் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அக்குதிரையானது சுற்றும் முற்றும் பார்த்தபடியே மன்னரைச் சுமந்துகொண்டு சென்றது. மன்னரைப் போலவே அவரது குதிரையும் உதவும் குணம் கொண்டதாகக் காணப்பட்டது.

அப்போது, நாய் ஒன்று காலில் அடிபட்ட காரணத்தால் நடக்க முடியாமல் தடுமாறிச் சென்று கொண்டிருப்பதைக் குதிரை பார்த்தது. உடனே அந்த நாய்க்கு உதவி செய்திட வேண்டுமென்று மனத்தில் நினைத்தது.

4th_STD_Tamil_Term 2.indd 22 6/12/2025 2:35:37 PM

அதனால், தன் கனைப்பொலியின் மூலம் மன்னரை அழைத்தது குதிரை. "அரசே, அதோ ஒரு நாய் நடக்க முடியாமல் தடுமாறிச் சென்று கொண்டிருக்கின்றதே. அதை என் முதுகில் ஏற்றிக்கொண்டு, அது எந்த இடத்திற்குச் செல்லவேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா?" என்று கேட்டது.

"குதிரையே! நீ இரக்கக் குணம் கொண்டிருக்கிறாய். உதவுவதில் உனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியைப் போன்றே எனக்கும் இருக்கின்றது" என்றார் மன்னர். உடனே தம் பின்னால் வந்துகொண்டிருந்த காவலர்களிடம் நாயைத் தூக்கித் தாம் அமர்ந்திருக்கும் இடத்தின் முன்னே வைத்திடுமாறு கூறினார்.

காவலர்களும் நாயைக் குதிரையின்மீது அமர வைத்தனர்.

மன்னருடன் குதிரைச்சவாரி செய்து கொண்டிருந்த அந்த நாயானது, மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

மன்னரின் குதிரையின் மீது அடிபட்ட நாய் அமர்ந்து வைத்து வருவதை மக்கள் கண்டனர். நம் மன்னர் அன்பின் வழி நடப்பவர் போலத் தெரிகிறது. சிறு உயிரான நாயிடமே நமது மன்னர் இவ்வளவு அக்கறை கொள்கிறார் அப்படியானால் நம் நலனைப் பாதுகாப்பவராகத்தான் இருப்பார் என்று எண்ணினர். அவரை வாழ்த்தி மகிழ்ந்தனர்.



4th_STD_Tamil_Term 2.indd 23 6/12/2025 2:35:37 PM



வாங்க பகிரலாம்

கதையைச் சொந்த நடையில் கூறுக.

காயம்பட்ட பறவை / விலங்கைப் பார்த்தால் என்ன செய்யலாம்?



சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. குறைகள் – இச்சொல்லின் எதிர்ச்சொல்

அ) குறைவு ஆ) நிறைகள்

இ) குற்றங்கள் ஈ) குட்டை

2. வேண்டுமென்று – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வேண்டு + மென்று ஆ) வேண்டு + என்று

இ) வேண்டும் + என்று ஈ) வேண்டும் + மென்று

3. கனைப்பொலி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கனை + பொலி ஆ கனை + ஒலி

இ) கனைப்பு + பொலி ஈ) கனைப்பு + ஒலி

4. கேட்டு + அறிய இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கேட்டுறிய ஆ) கேட்டறிய

இ) கேட்டுஅறிய ஈ) கேட்அறிய

வினாக்களுக்கு விடையளிக்க.

1. குதிரை, நாய்க்கு உதவி செய்ய நினைத்தது ஏன்?

2. மக்கள் மன்னரை ஏன் வாழ்த்தினர்?

3. மன்னர் குதிரையிடம் என்ன கூறி மகிழ்ந்தார்?

4th_STD_Tamil_Term 2.indd 24 6/12/2025 2:35:39 PM

முதலெழுத்து மாற்றி வேறுசொல் எழுதுக.

01 படிக்க நீயும் ..... விருப்பு .....

பாறையை உடைப்பது .....

சுவைத்தால் இனிக்கும் .....

பூ மலரும் முன்பு .....



02 கையின் மறுபெயர் ..... கரம் .....

வயலுக்கு இடுவது .....

பூக்களைத் தொடுத்தால் .....

புன்னை என்பது .....



03 நீர் இறைத்திடுவது ..... ஏற்றம் .....

புயலோ இயற்கை .....

தவறு இழைப்பது .....

வீட்டின் உள்ளே .....



பாடலைத் தொடர்ந்து எழுதுக. பாடி மகிழ்க.



நான்தானே குழந்தை
நான்தானே குழந்தை
என் சிரிப்பைப் பார்



நான்தானே குரங்கு
நான்தானே குரங்கு
என் குறும்பைப் பார்



_____

_____

என் முழக்கம் பார்



_____

_____

_____

4th_STD_Tamil_Term 2.indd 25 6/12/2025 2:35:41 PM

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



நினைத்தது	சுமந்துகொண்டு	செல்லவேண்டுமோ
உதவும் குணம்	ஏற்றிக்கொண்டு	முன்னேற்றத்தையும்
காவலர்களிடம்	பாதுகாப்பவராக	மேற்கொண்டிருந்தார்
வைத்திடுமாறு	கனைப்பொலி	அக்கறை கொள்கிறார்
குதிரைச்சவாரி	மகிழ்ச்சியடைந்தது	சென்றுகொண்டிருந்தார்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1 அரசே அதோ ஒரு நாய்

.....

2 அந்த இடத்தில் விட்டுவிடலாமா

.....

3 குதிரையே நீ இரக்கக் குணம் கொண்டிருக்கிறாய்

.....

4 நாயைக் குதிரையின்மீது அமர வைத்தனர்

.....


5 அந்த நாயானது மிகவும் மகிழ்ச்சியடைந்தது

.....

4th_STD_Tamil_Term 2.indd 26 6/12/2025 2:35:41 PM

7

நன்னெறி



இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே – பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்

– சிவப்பிரகாச சுவாமிகள்

சொல்லும் பொருளும்

இன்சொல்	–	இனிமையான சொல்
வன்சொல்	–	கடுமையான சொல்
அதிர்வளை	–	ஒலிக்கின்ற வளையல்
அழல்கதிர்	–	கதிரவனின் வெப்பக்கதிர்கள்
தண்ணென் கதிர்	–	குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி

பாடல் பொருள்

பொன்னாலான ஒலிக்கும் வளையல்களை அணிந்த பெண்ணே! கடலானது கதிரவனின் வெப்பத்தைக் கண்டு பொங்காது; குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி கண்டுதான் பொங்கும். அதுபோல, கடலால் சூழப்பட்ட இப்பெரிய உலகில் வாழும் மக்கள் இன்சொற்களைக் கேட்டு மகிழ்வார்களே அன்றி, வன்சொற்களைக் கேட்டு மகிழ மாட்டார்கள்.



வாங்க பகிரலாம்

- பாடலை உரிய ஒலிப்புடன் படித்து மகிழ்க.
- உன்னிடம் பிறர் எப்படிப் பேச வேண்டும் என எண்ணுகிறாய்? ஏன்?

நாம் இனிய சொற்களை ஏன் பேச வேண்டும்?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 2.indd 27 6/12/2025 2:35:42 PM

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இன்சொல் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) இன் + சொல் ஆ) இனிமை + சொல்

இ) இன்மை + சொல் ஈ) இனிய + சொல்

2. அதிர்கின்ற வளை – இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள் _____

அ) உடைகின்ற ஆ) ஒலிக்கின்ற

இ) ஒளிர்கின்ற ஈ) வளைகின்ற

3. வியனுலகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) வியன் + உலகம் ஆ) வியல் + உலகம்

இ) விய + உலகம் ஈ) வியன் + னுலகம்

வினாக்களுக்கு விடையளிக்க.

1. 'நன்னெறி' பாடலின் மையக்கருத்து யாது?

2. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும் என்று பாடலில் கூறப்பட்டுள்ளது?

பொருத்துக.

1. இன்சொல்	–	கதிரவனின் ஒளி
2. வன்சொல்	–	நிலவின் ஒளி
3. அழல்கதிர்	–	கடுஞ்சொல்
4. தண்ணெனல் கதிர்	–	இனிய சொல்

செயல்திட்டம்



உனக்குப் பிடித்த ஏதேனும் ஒரு திருக்குறளுக்குக் கதை/பொருள் அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.

4th_STD_Tamil_Term 2.indd 28 6/12/2025 2:35:43 PM

அகர முதலி

1. அக்கறை – ஈடுபாடு
2. அற்புதம் – வியப்பு தரும் வகையில் சிறப்பானது
3. அழல் கதிர் – கதிரவனின் வெப்பக்கதிர்கள்
4. அதிர்வளை – ஒலிக்கின்ற வளையல்
5. அனுபவம் – (நேரடியாக ஈடுபட்டுப் பெறும்) பட்டறிவு
6. ஆரவாரம் – பலர் கூடி இருக்கும் இடத்திலிருந்து எழும் பெரும் சத்தம்
7. ஆவல் – விருப்பம்
8. இன்சொல் – இனிமையான சொல்
9. இரக்கக்குணம் – உதவும் குணம் (பிறர் துன்பம் கண்டு வருந்தும் குணம்)
10. இரவல் – தன் பயன்பாட்டிற்காகப் பிறர் பொருளை பெற்று திருப்பித் தரும் முறை
11. ஈடான – இணையான
12. உலவுதல் – நடமாடுதல்
13. எண்ணம் – நினைப்பு
14. எழில் – அழகு
15. ஏற்றம் – உயர்வு
16. கதறினார் – வாய்விட்டு அழுதார்/ கவலைப்பட்டு அழுதார்
17. கணம் – மிகக் குறைந்த காலம்
18. சவாரி – பயணம்
19. சுற்றுலா – பொழுது போக்காகவோ ஓய்வுக்காகவோ மேற்கொள்ளும் பயணம்
20. செரிமானம் – செரித்தல்
21. தகவல் களஞ்சியம் – தகவல்களைச் சேகரிக்கும் இடம்
22. தன்னென் கதிர் – குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி
23. தரணி – உலகம்
24. திரட்டி – சேகரித்து
25. துக்கம் – கவலை
26. நாடினர் – விரும்பிச் சென்றனர்
27. நித்தம் – நாள்தோறும்
28. நேர்த்தியான – சீரான
29. பரிசல் – நீர்வழிப் போக்குவரத்துச் சாதனம்
30. மறுநாள் – அடுத்த நாள்
31. மூலிகைச் செடிகள் – மருத்துவ குணமிக்கச் செடிகள்
32. வன்சொல் – கடுமையான சொல்
33. வியனுலகம் – பரந்த உலகம்

4th_STD_Tamil_Term 2.indd 29 6/12/2025 2:35:44 PM

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல
• சூழ்நிலையில் தாம் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். • பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்பர். • வினாக்கள் எழுப்புவர். அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை/ எதிர்வினைகளை வெளிப்படுத்துவர்.	• பல்வேறு படைப்புகளின் தலைப்புகள், சூழல்கள், கதைமாந்தர்கள் குறித்துப் பேசுவர், தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவர். • தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பிப்பர்.	• தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிக்க ஆர்வம் கொள்வர். • செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள். விளம்பரங்கள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்துகொள்வர். • படித்து உணர்ந்தவற்றோடு தங்கள் அனுபவங்களையும் உணர்த்துவர். • சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படிப்பர்.	• பல்வேறு நோக்கங் களுக்கேற்ப / சூழல்களுக்கேற்ப எழுதுவர். • செய்யுள் பகுதிகளை அடிபிறழாமல் எழுதுவர். • சொல்வதைக் கேட்டு எழுதுவர். • குழந்தைகளுக்கான எளிய அகரமுதலியைப் பயன்படுத்த அறிவர். • சொற்களை அகர வரிசைப்படுத்துவர். • பொருத்தமான நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுவர்.

4th_STD_Tamil_Term 2.indd 30 6/12/2025 2:35:44 PM

நடைமுறை இலக்கணம் அறிதல்	கற்கக் கற்றல்	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்
• நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர் • காலம் அறிவர். (இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்)	• கதைநூல்கள் படிப்பர். • குழந்தைகளுக்கான எளிய அகரமுதலிகளைப் பயன்படுத்த அறிவர். • கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத்தொடர்கள் கேட்பர். • தகவல்கள். சொற்பொருள்கள் தேடி அறிவர்.	• சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படிப்பர். • சிறுவர்களுக்கான கதைகள், பாடல்களை விரும்பிப் படிப்பர். • பழமொழிகள், மரபுச்சொற்கள் அறிவர். • தொழிலாளர், தொழில்சார் பெயர்கள், சிறப்புவாய்ந்த நகரங்கள், ஊர்களின் பெயர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள் (இந்திய மாநிலங்கள். மாவட்டங்களின் பெயர்கள் அறிந்துகொள்வர். • கணினி, இணையம் சார்ந்த கலைச்சொற்களை அறிவர்.
படைப்புத் திறன்கள்	**விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்**	**வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர்**
• சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் எழுத முனைவர். • விளம்பரங்கள், அறிவிப்புகள், நிகழ்ச்சிநிரல்கள் உருவாக்க அறிவர். • பாடலின் வரிகளை மாற்றிப்பாடுவர். • கற்பனைக் கடிதம் எழுதுவர். • கலையும் கைவண்ணமும்	• காலம் தவிர்க்காமை • விதிகளைப் பின்பற்றுதல் • தூய்மை பேணுதல் • பொருள்களைப் பாதுகாத்தல் • பிறர்க்கு உதவுதல் • பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் • கூட்டுணர்வு • நட்புணர்வு • உண்மை பேசுதல் • சேமிப்புணர்வு • நன்றியுணர்வு • தன்னம்பிக்கை	• தன்னை அறியும் திறன் • கூர்சிந்தனைத் திறன் • சிக்கல் தீர்க்கும் திறன் • முடிவெடுக்கும் திறன் • படைப்பாக்கச் சிந்தனை • சிறந்த தகவல் தொடர்புத் திறன் • இணக்கமான உறவுக்கான திறன் • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் • உணர்வுகளைக் கையாளும் திறன் • மனஅழுத்தத்தைக் கையாளும் திறன்

4th_STD_Tamil_Term 2.indd 31 6/12/2025 2:35:44 PM

தமிழ் – நான்காம் வகுப்பு
நூல் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை மாவட்டம்.

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே. பத்மாவதி, எழுத்தாளர்,
சென்னை மாவட்டம்.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

திரு சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை மாவட்டம்.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்.
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை மாவட்டம்.

தே. விமலா தேவி, விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா நலன் நான்சி ராஜன்
ரா. ஷாலினி
வை. மை. பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
பா. ரவிகுமார்
வேல்முருகன்
பா. பிரமோத்
செ. ரமேஷ்குமார்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ்

காமாட்சிபாலன் ஆறுமுகம்.

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையாம்பாளையம்,
கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர், வேப்பூர் ஒன்றியம்
பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

திரு. பா.ச.குப்பன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்.
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திரு. ஆ மாணிக்கம், இடைநிலை ஆசிரியர்.
ஊ. ஒ. தொ.பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.

திருமதி. ந. பரிமளா, தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

திரு. வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திரு. ந. மாமலைவாசன், பட்டதாரி ஆசிரியர்.
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

திரு. வெ. ராஜா, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.தி பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.

திருமதி பி. கற்பகம் இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஐயப்பா நகர், வில்லிவாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்

திரு. கு. மனத்துணைநாதன்,
இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி,
கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம்

திரு. பெ. கார்த்திகேயன், இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

EMS தொழில்நுட்பக் குழு

இரா. மா. சதீஸ்
இரா. அருண் மாருதி செல்வன்,
க. ப. சத்தியநாராயணா

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

ம. அமல்ராஜ்

4th_STD_Tamil_Term 2.indd 32 6/12/2025 2:35:44 PM

ENGLISH

STANDARD FOUR

TERM - II



Title.indd 1 8/7/2019 6:05:03 PM

Preface

The English Language textbook has been designed to enable a fun-filled and engaging experience in learning the language. The approach allows for plenty of practice in the four language skills. It focuses on structure practice and vocabulary enrichment through a variety of language learning activities. These activities evoke interest and engaged practice in the language and thus lead to retention.

As per NCF 2005, language is learnt when it is taught with exposure in meaningful context rather than as a subject. In accordance with this, the textbook has been drafted with themes related or familiar to children. The units provide space for effective individual and pair work and thus allows the teacher to focus on time management in multi-level classrooms.

How to use the textbook?



- The second term English Book for Standard IV has two units.
- Each unit is planned for a month.
- Nila introduces the theme of each unit.
- Each unit is designed with habits and values relatable to children like savings and affection.
- My little pictionary provides exposure to an attractive pictorial dictionary.





- Let us learn is the teacher led prose and helps children learn vocabulary and values with the help of the context set in each lesson
- Let us build provides scope for learning vocabulary with associated grammar concepts. The section is followed by exercises to help children practise.
- Let us know provides scope for teaching grammar in a context. The section helps children learn grammar concepts inductively.

- Let us listen develops the listening skill of children by following instructions and acting accordingly.
- Let us speak provides an opportunity for the teachers to teach the language structures through games and activities. It develops listening and speaking skills.
- Let us sing provides an opportunity for the children to sing rhymes with actions and intonation. It helps children learn new vocabulary contextually.





- Brainy box kindles the children's divergent and convergent thinking ability.
- Let us read is a supplementary lesson that helps children learn vocabulary and values with the help of stories.
- Let us read aloud develops reading habit in children by familiarising them with short, interesting stories.
- Let us write builds writing skill in children.



Preface.indd 2 8/7/2019 6:06:53 PM

Unit 1 — Affection

- At this age children share their affection with everyone around them.
- In the story, "Appa" we read about the life of Meenu to understand affection in a different light.
- In the poem, "The real wealth" we learn that love and care is more important than wealth.
- In the story, "A True friend" we read about the bond that friends share.





Unit 2 — Savings

- It is important for children to learn to save so that it can be developed into a habit.
- The story, "A Lesson to save" teaches us to save the natural resources.
- The poem, "What do humans save?" raises questions on the importance of saving.
- In the story, "Save Wisely" we read about some children who meet their needs by their savings.



Learning outcomes

- It is a moment of pride for children as they colour the balloons.
- This self-assessment tool helps boost their self -confidence.
- It is also a diagnostic page for the teacher to ensure that each student has attained the expected learning outcome in each unit.





Preface.indd 3 8/7/2019 6:06:54 PM

Content

Unit	Title	Page No.	Month
1	Affection	37	October
2	Savings	57	November

7IWNJ

E-Book

YFEA7

Assessment

4th_STD_English_Term 2.indd 36 6/5/2025 3:39:24 PM

1 Affection



4th-STD-English-Unit-1-Affection.indd 69 8/7/2019 6:05:32 PM

MY LITTLE PICTIONARY



Whirled (v) : to spin or rotate rapidly



Wipe (v) : clean or dry something by rubbing with a cloth, a piece of paper or one's hand



Tumbled (v) : to fall



Scream (v) : to cry / shout loudly with strong emotions



Grab (v) : hold or catch

4th-STD-English-Unit-1-Affection.indd 70 8/7/2019 6:05:33 PM

LET US LEARN

Appa

